தகவல் வந்திருக்கிறது. அது இப்படிப்பட்ட நிலையில் எங்கு கொண்டு போய்விடும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் சிந்திப்பதற்கும், அதைப்பற்றி நல்லதொரு வாய்ப்பு தரப்பட்டு இருக்கிறது என்கின்ற நிலையில் உங்கள் முன் வைத்து, மீண்டும் உறுதியாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் இறங்குபவர்கள் மீது அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் ஆண்டிப்பட்டி தொகுதியில் ஒரு யூனியனில் ஆசிரியர் நியமனம்பற்றி ஒரு புகாரைச் சொன்னார். அதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரித்துக் கொண்டு இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்புகள்.

(அ) மழையினால் புழலேரி ஆயக்கட்டின் கீழுள்ள நெற் பயிர்கள் பாதிக்கப்பெற்றதினால் விவசாயிகள் கடன்களைத் திரும்பத் தர இயலாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்புத் தீர்மானம். தீர்மானம் கொடுத்த திரு. மாரிமுத்து அவர்கள் இருக்கையில் இல்லாததால் இதை வேறு யாராவது எழுப்பினால் அமைச்சர் அவர்களே இதற்கான பதில் அறிக்கையைப் படிக்கலாம்.

திரு. துரை முத்துசாமி : திரு. மாரிமுத்து அவர்கள் இல்லாததால் நான் அதை வாசிக்கிறேன். ''செங்கல்பட்டு மாவட்டம், புழல் ஏரி ஆயக்கட்டின் கீழ் உள்ள நெற் பயிர்கள் கடந்த மழையினால் பெருவாரியாக பாதிக்கப்பெற்றதின் காரணமாக விவசாயிகள், கூட்டுறவுச் சங்க கடன்களைத் திரும்பத் தர இயலாது இருப்பதைக் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தீர்மானத்தைத் தந்த திரு. மாரிமுத்து அவர்கள் இருக்கையில் இல்லை என்றால் அதற்காக நீங்கள் அதைப் படிக்க வேண்டும் என்றில்லை. மாரிமுத்து அவர்கள் சார்பாக இதை எழுப்புகிறேன் என்று சொல்லி விட்டாலே போதும், தீர்மானம் முழுவதையும் வாசிக்க வேண்டும் என்பதில்லை.

The Hon. Thiru S. RAMACHANDRAN ; Mr. Deputy Speaker Sir, Under rul 41, sub-clause (6), if on a matter being taken up a member in whose name it stands is absent. the Speaker at the request of any member may direct that the statement on the matter may be mad.. That is all,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நானும் அதையே தான் சொன்னேன். அதனால்தான் வாசிக்கக் கூடாது என்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் வகையிலே அறிக்கையைப் படிக்கலாம்.

திரு ஜே. ஜேம்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நாம் கடைபிடிக்கின்ற மரபு என்னவென்று சொன்னால், 41-வது விதியின் கீழ் அந்தத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கின்ற அங்கத்தினர் அந்தத் தீர்மானத்தை படிப்பதுதான் மரபு. ஆகவே, அந்த மரபை மாற்றுகின்ற முறையிலே இல்லாமல், அந்தத் தீர்மானத்தை அங்கத்தினர் வாசிப்பதுதான் முறை..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 41-வது விதியின்கீழ் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தது காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து. அவர் இப்போது அவையிலே இல்லாத காரணத்தால், அவர் பெயரிலே உள்ளதை ஒருவர் வற்புறுத்தினால், அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். அவர் அந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தால் வாசிக்கச் சொல்லியிருப்பேன். ஆகவே அனுமதி மறுக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைக் கோளாறுகளால் பயிர் பாதிப்பு ஏற்படும்போதெல்லாம், "எந்தக் குறுகிய கால விவசாயக் கடன்கள் மூலம் அவைகள் பயிரிடப் பெற்றனவோ அந்தக் குறுகியக் காலக் கடன்கள் நடப்பாண்டில் ஏற்படுகின்ற கெடு தேதியன்று வசூலிக்கப்படுவதில்லை. வருவாய்த்துறை அதிகாரிகள் சராசரி மகசூல் 6 அணா அல்லது அதற்கும் குறைவாக உள்ளது என்று விகிதாச்சார விளைவு அடிப்படையில் வழங்குகின்ற சான்றிதழ்களின் அடிப்படையில், குறுகிய காலக் கடன்கள் அடுத்த ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் மத்தியக் காலக் கடன்களாக மாற்றப்படுகின்றன.

1979 பிப்ரவரி 26] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

புழலேரி பகுதியில் நாரவாரிக்குப்பம், கொடுங்காயூர், ஆண்டியார்குப்பம் ஆகிய மூன்று கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள் உள்ளன. இந்த மூன்று சங்கங்களில் நாரவாரிக்குப்பம் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் மட்டுமே (7 பெரிய விவசாயிகளுக்கும் 15 சிறு விவசாயிகளுக்கும் சேர்ந்து) மொத்தம் 22 உறுப்பினர்களுக்கு அறுபத்தி நான்காயிரம் ரூபாய் கடன் வழங்கியுள்ளது. இக்கடன்களைத் திரும்பச் செலுத்தும் கெடுநாள் 28—2—1979 ஆகும். இந்தப் பகுதியில் சராசரி மகசூல் ஆறு அணா அல்லது அதற்கும் குறைவாக உள்ளது என்று விகிதாச்சார விளைவு அடிப்படையில் சான்றிதழ்கள் வருவாய்த்துறை அதிகாரிகளால் வழங்கப்படவில்லை. இருப்பினும் காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி வருவாய்த் துறை அதிகாரிகள் மூலம் நாரவாரிக்குப்பம் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் கடன் விளைவிக்கப்பெற்ற பயிர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்று அறியத்தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. வருவாய்த்துறை அதிகாரிகள் சராசரி மகசூல் ஆறு அணா அல்லது அதற்கும் குறைவாக உள்ளது என்று சான்றிதழ்கள் வழங்கினால் அதனடிப்படையில் குறுகியக் காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற தக்க நடவடிக்கை எடுக்கப் பெறும்.

(ஆ) காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்னையில் தஞ்சாவூர் பகுதிகளில் எழுந்துள்ள பதட்ட நிலைமை குறித்து.

திரு. துரை கோவிந்தராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் நடந்த பேச்சுவார்த்தைகள் சுமுகமாக முடியாததற்கு தமிழ்நாடு அரசு தான் காரணம் என்று கேரள நீர்ப்பாசன அமைச்சர் கேரள சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்ததாகக் கூறப்படும் காரணத்தால், தஞ்சாவூர் பகுதிகளில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து'' நான் 41-வது விதியின் கீழ் கொடுத்துள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

[முற்பகல் 11–00]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, பிப்ரவரி திங்கள் 23-ம் நாள் ''இந்து'' பத்திரிக்கையில் வந்த செய்தி ஒன்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதில் கேரள மாநில அரசின் தொழிலாளர் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்